ஒகேனக்கல் – பெண்ணாகரம் – தருமபுரி – திருப்பத்தூர் சாலையை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணி!

ஒன்றிய அரசின் அனுமதி கிடைத்தவுடன் விரைந்து நிறைவேற்றப்படும்!

சட்டப்பேரவையில் – அமைச்சர் எ.வ.வேலு உறுதி!

சென்னை, மார்ச் 22-

பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் பெண்ணாகரம், தருமபுரி திருப்பத்தூர் சாலையை இரு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணி ஒன்றிய அரசின் அனுமதி கிடைத்தவுடன் விரைந்து நிறைவேற்றப் படும் என்று, சட்டப்பேரவையில் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவித்தார்.

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

ஒகேனக்கல் பெண்ணாகரம் தருமபுரி திருப்பத்தூர் சாலை 69 கி.மீ. கொண்ட மாநில நெடுஞ்சாலையாகும். இதில் ஒகேனக்கல் அபிவிருத்தியிலிருந்து தருமபுரி செல்லும் சாலை 12 கி.மீ. தூரம் வனப் பகுதியில் செல்லும் சாலையாக உள்ளது. இந்தப் பகுதியில் தார்ச்சாலை அகலம் 7 மீட்டர் கொண்ட இருவழித்தடமாக அமைந்துள்ளது. நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்த போதுமான போக்குவரத்துச் செறிவு தேவைப்படுகிறது. நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்த தேவையான நிலம் கையகப்படுத்துவதற்கு வனத் துறையின் தடையின்மைச் சான்று பெற வேண்டிய அவசியம் இந்தத் துறைக்கு உள்ளது. எனவே, இரண்டு துறைகளும் கூட்டாய்வு செய்து தருமபுரியிலிருந்து 45 கி.மீ. தொலைவில் உள்ள ஒகேனக்கல் சாலையில் 5 கி.மீ. தூரம் நான்குவழிச் சாலையாக இப்போது இருந்து கொண்டிருக்கிறது. மீதமுள்ள சாலை அரசின் நிதி நிலைமைக்கேற்ப படிப்படியாக அகலப்படுத்தப்படும்.

ஜி.கே.மணி : ஒகேனக்கல்லிருந்து பெண்ணாகரம், தருமபுரி வழியாக திருப்பத்தூர் சாலை வரை நான்கு வழிச்சாலையாக உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நம்புகிறோம். அந்த நம்பிக்கையின் அடிப்படையில், எல்லா வகையிலும் நெடுஞ்சாலைகளை நிறைவேற்றித் தருகிற அமைச்சர் அவர்கள் இந்தச் சாலையை நான்கு வழிச்சாலையாக அமைத்துத்தருவார்களா?

அமைச்சர் எ.வ.வேலு: அந்தச் சாலையிலே குறிப்பிட்ட இடங்களில் நான்கு வழிச்சாலையாக அமைக்கப்பட்டிருக்கிறது என்ற கருத்தையும் அவரிடத்தில் சொல்லியிருக்கிறேன். பொதுவாக, வனத் துறையைப் பொறுத்தவரை அனுமதி என்பது எந்த அடிப்படையில் இருக்கிறது என்று சொன்னால், ஏற்கெனவே வனப் பகுதியிலே 5 ½ மீட்டர் சாலை போடப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அந்தச் சாலை மட்டும்தான் மேம்படுத்தப் படுகிறது. நமது கண்ணிற்கு இரண்டு பக்கங்கள் அதிகமாகத் தெரிகிறது. ஆனாலும்கூட அதை விரிவுபடுத்தவேண்டுமென்று சொன்னால், மீண்டும் வனத் துறையிலே நாம் NOC வாங்கித்தான் போட வேண்டிய நிலை இருக்கிறது. நமது கண்ணுக்குத் தெரிந்து அதிகமாக இருக்கிறது அதை போடலாம் என்றால்கூட போடமுடியவில்லை. உதாரணத்திற்கு என்னுடைய சொந்த ஊர் திருவண்ணாமலையிலிருந்து சே.கூடலூர் என்பது 50 கி.மீ. தூரத்தில் இருக்கிற ஒரு கிராமம். அதன் இடையில் thickest forest ஒன்று இருக்கிறது. ஆனால் கண்ணுக்குத் தெரிந்து ஏற்கெனவே இருக்கிற சாலையில் இந்தப் பக்கம் 1 ½ மீட்டர், அந்தப் பக்கம் 1 ½ மீட்டர் போடலாம் என்று நானே முடிவு செய்து வனத் துறைக்கு தொடர்ந்து கடிதங்கள் எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன். இன்னும் எனக்கு NOC கிடைக்கவில்லை. அது கிராமத்திற்கு போகிற சாலை 3 ¾ மீட்டர் சாலையாகும். அந்தச் சாலையை விரிவுபடுத்த வேண்டுமென்கிற முயற்சியை ஓராண்டு காலமாக எடுத்துக்கொண்டிருக்கிறேன். வனத் துறையின் அனுமதி பெற்றால்தான் அதைக் கொடுக்கமுடியும். ஏனென்றால், மாநில அரசின் கட்டுப்பாட்டில் வனத் துறை இல்லை. ஒன்றிய அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிற காரணத்தினால், சில சாலைகளைக் குறித்து ஒன்றிய அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொண்டுசென்றுதான் நம்மால் NOC வாங்க முடிகிறது.

எனவே, அந்த அடிப்படையில்தான் இரண்டு துறைகளும் சேர்ந்து அதுகுறித்து முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னேன். அந்த NOC வந்தால் அந்த நான்கு வழிச் சாலை அமைப்பதிலே அரசுக்கு வேறொரு மாற்றுக் கருத்து இல்லை. கட்டாயம் NOC வந்தவுடன் அந்தச் சாலை அமைத்துத்தரப்படும்.

வனத் துறையில் இடம் எடுத்தால் வருவாய்த் துறையில் அந்த இடம் ஈடுசெய்வது என்பது, எல்லா இடங்களிலும் அது பொருத்தமாக இருப்பதில்லை. ஒரு முக்கியமான சாலைகளை மட்டும்தான் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். அதற்கு உதாரணமாக நான் ஒன்று சொல்லவேண்டுமென்று சொன்னால், அதற்குஅதிகமாக இருக்கிறது. முதலில் எந்த இடத்தை எடுக்கப் போகிறோம், எதை நாம் கொடுக்கப்போகிறோம் என்று இரண்டு துறைகளும் ஆய்வு செய்தபிறகுதான் அந்த இடத்தை ஒத்துக் கொள்கிறார்கள். இரண்டாவது நாம் விரிவுபடுத்துகிற இடங்களில் அகலத்தைப் பார்த்துவிட்டு, எத்தனை மரங்கள் இருக்கிறது, என்ன அளவு இருக்கிறது, எவ்வளவு நீளம் இருக்கிறது என்றெல்லாம் வனத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் கணக்கெடுத்து அதற்குப் பின்னால்தான் அவர்கள் வேறொரு இடத்தை எடுத்துக்கொள்வதற்கு ஒத்துக் கொள்கிறார்கள். அதனால்தான் இரண்டு துறைகளும் கலந்து பேசிக்கொண்டு இருக்கிறது. விரைந்து முடிக்கப்படும் என்று சொல்லிவிட்டேன். அடுத்தது, கோட்டையூர், தருமபுரி, ஒட்டனூர் ஸ்டான்லி நீர்த்தேக்க தொட்டிப் பாலத்தைப் பற்றி இங்கே நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஒட்டனூருக்கு நானே ஒருமுறை பரிசலில் சென்றிருக்கிறேன். 20062011ல் இடைப்பட்ட நேரத்தில் இடைத்தேர்தல் நடந்தபோது, பெண்ணாகரம் தேர்தலினுடைய தேர்தல் பொறுப்பாளராக நான் இருந்த காரணத்தினால், அந்த பெண்ணாகரம் தொகுதியில் என்னென்ன ஊர் இருப்பது குறித்து ஜி.கே. மணி அவர்களுக்கு தெரியுமோ அது எனக்கும் தெரியும்.

அவர் சொன்னதைப் போல ஓசூர் industrial corridorக்குச் செல்வதற்கு, கோயம்புத்தூர் பகுதியிலிருந்தும், ஈரோடு பகுதியிலிருந்தும் செல்வதற்கு அந்த பாலம் பயன்படும் என்பதை நானும் அறிவேன். ஏனென்றால், பெண்ணாகரத்திலிருந்து ஆரம்பித்து, பக்கத்தில் இருக்கின்ற பாப்பிரெட்டிப்பட்டி, பாலக்கோடு வழியாக நேரடியாக செல்கிற சாலை ஒன்று இருக்கிறது என்பது புரிகிறது. அதனால்தான், முதலமைச்சர் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் ஓர் அரசு நிகழ்ச்சியிலே கலந்து கொண்டபோது, இந்தக் கோரிக்கையை அவர்கள் வைத்தார்கள். அதைச் செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் எனக்கு பணித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இப்பொழுது இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் tender விடப்பட்டு, DPR தயார் செய்து கொண்டிருக்கிறோம். அந்த DPR முடிந்த உடனேயே முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நீங்கள் விழாவில் இப்படி பேசியிருக்கிறீர்கள்,

நம்முடைய மூத்த சட்டமன்ற உறுப்பினர், நம்முடைய மனதிற்கும் மிகவும் இணக்கமாக இருக்கிற அவர், இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார். அதனால், இதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்று நான் கேட்க வேண்டிய ஒரு நிலையிருக்கிறது. காரணம், இதற்கு ஒரு பெரும் பணம் தேவைப்படுகிறது. ஏனென்றால், இது சாதாரண ஆற்றின் மேலே செல்கிற பாலமே அல்ல; நீர்த்தேக்கத்தில் இருக்கிற, Mettur Dam என்று சொல்கிறோமே அந்த Mettur Damல் நீர்ப்பிடிப்பு இருக்கிற இடத்தில் கட்டப்படுகின்ற பாலம் இந்த பாலம். இதற்கு DPR தயார் செய்து வருகிறார்கள். அதற்கு ஒரு பெருந்தொகைத் தேவைப்படுகிறது. இன்னும் DPR முடியவில்லை, அந்தப் பணி முடிந்தவுடனே முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்து இப்பணியை முன்னெடுத்துச் செல்வதற்கு நானும் உங்களுக்கு உதவியாக இருப்பேன்.

ஒன்றிய அரசின் வனத்துறைச் சட்டங்கள்!

அமைச்சர் க.பொன்முடி: வனத் துறையைப் பொறுத்தவரை யில், அதில் பெரும்பாலான சட்டங்கள் ஒன்றிய அரசினால் உருவாக்கப்படுகின்றன. வனத் துறையில் இது போன்ற பல்வேறு இடங்களிலேயும், அது வழியாக அரசு சாலைகள் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையும் வந்திருக்கின்றது. அதையும் நமது முதலமைச்சர் அவர்கள், அது உண்மையிலேயே அவசியமாக தேவைப்படும் என்று சொன்னால், அங்கே சாலை அமைப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்யச் சொல்லியிருக்கிறார். அதற்காக நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் நாங்களெல்லாம் கலந்து பேசி, உங்களுடைய கோரிக்கை சரியாக. . .(குறுக்கீடு) அதற்குத்தான், அந்த NOC கொடுப்பதற்குத்தான் அரசாங்கத்தினுடைய தடைகள் எல்லாம் இருக்கின்றன. ஒன்றிய அரசாங்கத்தினுடைய தடை இருக்கிறது. NOCயை சாதாரணமாக கொடுக்க முடியாது. அது அரசுக்கு தேவைப்படுகிற நிலம், அதே மாதிரி மக்களுக்கு, அந்த பகுதிகளிலே இருப்பவர்களுக்கு தேவைப்படுகிறது என்ற காரணத்தினால் அதையும் கூர்ந்து கவனித்து, அதற்கான பணிகளைச் செய்யுமாறு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதுபோல பல்வேறு மாவட்டங்களி லிருந்தும் இந்தப் பிரச்சினைகள் எல்லாம் வந்திருக்கின்றன.

கா.அண்ணாதுரை: பட்டுக்கோட்டை நகரத்தினுடைய மூன்றாம் கட்ட புறவழிச் சாலைக்கான திட்ட மதிப்பீடு தற்போது அரசுக்கு வந்துள்ளது. இந்த மூன்றாம் கட்ட புறவழிச் சாலை என்பது பட்டுக்கோட்டை நகர போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு மிகவும் இன்றிமையாததாகும். தற்போது, நம்முடைய நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டை நகரத்திற்கு 20 கோடி ரூபாய்க்கு ஒரு பேருந்து நிலையம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கி அந்தப் பணிகள் தற்போது முடிவடைய இருக்கின்றன. இந்தப் பேருந்து நிலையப் பயன்பாட்டிற்கும், அருகிலே வரக்கூடிய அந்த மூன்றாம் கட்ட புறவழிச் சாலை மிக இன்றிமையாத ஒன்றாகும். எனவே, அந்த புறவழிச் சாலைக்கான திட்ட மதிப்பீட்டுத் தொகை இந்த நிதியாண்டிலே ஒதுக்கப்பட வேண்டும்.

பட்டுக் கோட்டையில் புறவழிச் சாலைகள்!

அமைச்சர் எ.வ. வேலு: ஏற்கெனவே அவர் சொன்னதைப்போல, இரண்டு கட்ட புறவழிச் சாலைப் பணிகள் நடைபெற்று விட்டன. மூன்றாம் கட்டத்துக்கான பணிகள் இந்த ஆண்டு நிதிநிலைமைக்கேற்ப துறையின் சார்பாக எடுத்துக் கொள்ளப்படும்.

டாக்டர். சி. சரஸ்வதி: ஈரோடு மாவட்டத்தையும், நாமக்கல் மாவட்டத்தையும் இணைக்கின்ற எல்லையில் காவிரிக் கரையில் LC5 என்ற railway gate உள்ளது. ஈரோட்டிற்கும் சாவடிபாளையத்திற்கும் இடையில் உள்ள இரயில்வே கேட் ஆகும். ஈரோடு சுற்று வட்டப்பாதையும் இது தான். சோலார் புதிய பேருந்து நிலையமும் அருகில் உள்ளது. போக்குவரத்து நெரிசலையும், நேர விரயத்தையும் தவிர்க்க, இரயில்வே மேம்பாலம் அவசியமாகிறது. மத்திய இரல்வே அமைச்சகம் தங்கள் பங்கை செய்ய தயாராக இருக்கிறார்கள். இது நீண்ட நாள் கோரிக்கையாகும். இந்த ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்து அமைத்துத்தர, அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

அமைச்சர் எ.வ. வேலு: நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர், சகோதரர் ஈ.ஆர். ஈஸ்வரன் , என்னிடம் தொடர்ந்து ஏற்கெனவே கடிதமும் கொடுத்து இருக்கிறார், சட்டமன்றத்திலும் கேட்டிருக்கிறார். இந்த கேள்வியை நீங்கள் எழுப்பியிருக்கிறீர்கள். இதுசம்பந்தமாக துறையின் சார்பாக, இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், இரயில்வேன் போக்குவரத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியமும் இருக்கிறது. சென்ற மாதம் நாமக்கல் மாவட்டத்தில் அரசு நிகழ்ச்சிக்கு வந்தபோது, இவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஒன்றிய அரசாங்கத்தின் இரயில்வே துறைக்கு நாங்கள் கடிதம் எழுதியிருக்கிறோம். போக்குவரத்து செறிவு அளவு கடிதம் மூலமாக பெற்றவுடனே அதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணம் ஒதுக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்து, இந்த ஆண்டு அதற்கான முன்னெடுப்புப் பணிக

விருதுநகரில் நான்கு வழிச்சாலை!

ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: விருதுநகரில் இருந்து எரிச்சநத்தம்அழகாபுரி வழியாக செல்லக்கூடிய இருவழிச் சாலையை, நான்கு வழிச் சாலையாக தரம் உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? அப்படி இருக்கிறது என்றால் இந்த ஆண்டு அதை நிறைவேற்றி கொடுப்பார்களா?

அமைச்சர் எ.வ. வேலு: பேரவைத் தலைவர் அவர்களே, இருவழிச் சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றவேண்டு மென்றால் அதனுடைய போக்குவரத்துச் செறிவு அளவு எடுத்துக்கொண்டு, நான்கு வழிச் சாலையாக மாற்றமுடியும். 17,500 PCU இருக்குமானால் அதை நான்கு வழிச் சாலையாக மாற்றமுடியும். எனவே, சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன் கேட்ட, கேள்வியை அதை நான் அவருடைய கடிதமாக எடுத்துக்கொண்டு, துறைக்கு அனுப்பி, அப்படி சாத்தியக்கூறு இருக்குமானால், இந்த ஆண்டு அந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படும்.

மொ. பழனியாண்டி: ஸ்ரீரங்கம் தொகுதி, பஞ்சப்பூரிலிருந்து கரூர் bypass வரையிலுள்ள அரைவட்டச் சாலை 15 ஆண்டு காலம் கிடப்பில் உள்ளது. அதை அரசு செய்து தர முன்வருமா?

அமைச்சர் எ.வ. வேலு: பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் தொகுதி உறுப்பினர் கேட்ட கேள்வியை தனிக்கேள்வியாக போட்டிருந்தால் அதற்கு விவரமாக பதில் சொல்லியிருக்கலாம். இருந்தாலும் அவர் கேள்வி கேட்டிருக்கிறார். அதை நான் குறிப்பெடுத்துக்கொண்டு, இந்த ஆண்டு நிதிநிலைமைக் கேற்ப அந்தப் பணிகள் அரசின் சார்பாக முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (20.03.2025) அமைச்சர் சு. முத்துசாமி தலைமையில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறையின் 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான வரைவு கொள்கை விளக்க 5 குறிப்பு, அறிவிப்புகள் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

புகார் இன்றி 4 ஆண்டுகளாக வழங்கி வருகின்றோம்!

நடப்பாண்டிலும் டிசம்பருக்குள் வேட்டி சேலைகள் வழங்கி விடுவோம்!

பேரவையில் – அமைச்சர் ஆர்.காந்தி விளக்கம்!

சென்னை, மார்ச் 22-

தமிழ்நாடு அரசின் சார்பில் இலவசமாக வழங்கப்படும் வேட்டி சேலைகள் கடந்த நான்காண்டுகளாக புகார்களுக்கு இடமளிக்காமல் வழங்கி வருகின்றோம். நடப்பாண்டிலும் டிசம்பருக்குள் வழங்கி விடுவோம் என்று பேரவையில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி , அ.தி.மு.க. உறுப்பினர் தங்கமணிக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

ஆர். காந்தி குறிப்பிட்டதாவது : உறுப்பினர் power loomsவிசைத்தறிப் பற்றி பேசினார். நமது Industries Minister பேசும்போது சொன்னார். இதுவரையில் power loomsக்கு இன்றைக்கு 30 கோடி ரூபாய் capital subsidy modernisation செய்வதற்காக announce செய்தது, இந்த Budgetல் first time. அதே மாதிரி 20 கோடி ரூபாய், ஒன்றிரண்டு இல்லை. உறுப்பினர் வேட்டி சேலை குறித்து சொன்னார். பொதுவாக கடந்த வருடம் பார்த்தீர்களென்றால், டிசம்பரில்தான் first time. டிசம்பர் மாதம் 30 ஆம் தேதியன்று Revenue Departmentக்கு நாங்கள் கொடுத்தோம். யாரிடம் வேண்டுமானாலும் கேட்டு கொள்ளுங்கள். அதேமாதிரி தரம். நான்கு வருடத்தில் எங்கேயாவது complaints வந்திருக்கிறதா என்று பாருங்கள்.

அதேமாதிரி இந்த வருடம்கடந்த வருடத்திற்கான காரணம் Parliament தேர்தல். Government G.O. போடுவதற்கு late ஆனது. Government G.O. எப்போது போட்டார்களென்றால், 27—8-2024. அதற்குப் பிறகு tender call for செய்ததற்குப் பின்னர், இந்த வருடம் மட்டும்தான் 27-1-2025ல் dhoties complete செய்தாகிவிட்டது. 19-2-2025ல் complete செய்தாகிவிட்டது. இதெல்லாம் இதுவரைக்கான history ஆகும். அதே மூன்று மாதங்களில் இதுவரைக்கும் இந்தமாதிரி செய்ததே கிடையாது.

நீங்கள், உங்களுடைய 10 ஆண்டுக்கால ஆட்சியில் எடுங்கள். அக்டோர் வரைக்கும் கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் சொல்லுங்கள். இதற்கு முன்பிருந்த தரத்தைஇன்றைக்கு நான் உங்களிடம் challenge செய்கிறேன். இந்த தரத்தை யாராவது குறை சொல்கிறார்களா, எங்காவது complaint வந்திருக்கிறதா என்று பாருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தரத்தை காட்டி ஒவ்வொருவரும் எங்களைப் பாராட்டியிருக்கிறார்கள். தொழில் செய்கிற அவருக்குத் தெரியும். இன்றைக்கு அவருக்கு எல்லாமே நன்றாகத் தெரியும். தெரிந்திருந்தும் அவர் பேசுகிறார். பேசுகிற நீங்களெல்லாம் என்ன பேசுகிறீர்கள்? எல்லாவற்றையும் நாங்களும் உட்கார்ந்து கொண்டுதான் கேட்டுக் கொண்டிருக்கிறோம். நீங்கள் பேசுங்கள். எதிர்க்கட்சிகள் பேச வேண்டியதுதான், கேட்க வேண்டியதான். நாங்களும் கேட்கிறோம்.

உண்மையைச் சொல்லுங்கள். நீங்கள் ஆட்சி செய்த 10 ஆண்டுக்காலத்தில் என்ன நடந்தது என்று கொஞ்சம் திரும்பிப் பாருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் பார்க்காமல், ஒன்றுமே இல்லாத சப்ஜெக்ட்டுக்கு, எடுத்ததற்கெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நிச்சயமாக, இந்த வருடம் டிசம்பர் மாதத்திற்குள்ளாகவே நாங்கள் சப்ளை செய்து கொடுப்போம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

‘உதான்’ திட்டத்தின் கீழ்

திருவண்ணாமலையில் விமான நிலையம் அமைத்திடுவீர்!

மக்களவையில் சி.என்.அண்ணாதுரை வலியுறுத்தல்!

புதுடெல்லி, மார்ச் 22

உதான் திட்டத்தின் கீழ் திருவண்ணாமலையில் விமான நிலையம் அமைக்க வேண்டும் என்று மக்களவையில் விதி எண். 377-ன் கீழ் பேசுகையில் திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை வலியுறுத்தினார்.

அவர் பேசியது வருமாறு:-

திருவண்ணாமலை நகரில் அருணாச்சலேஸ்வர் ஆலயமும் ரமணமகிரிஷி ஆஸ்ரமும் இருப்பதால் உலக அளவிலும் நாடு முழுவதிலும் பிரபலமாக விளங்கி வருகிறது. திருவண்ணாமலை நகரம். இது மிகவும் புனிதத்தலமாக கருதப்படுவதால், தினம் தினம் லட்சக்கணக்கானவர்கள் அங்கு வந்து போகின்றனர்.

அது மட்டுமின்றி ஒவ்வொரு மாதம் பவுர்ணமி தினத்தன்று 15 முதல் 20 லட்சம் பேர் வரை அங்கு 14.5 கி.மீ. தூர கிரிவலத்திற்காக பல்வேறு நாடுகளிலிருந்தும் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் வந்து போகின்றனர்.

அத்துடன் ஆண்டுதோறும் கார்த்திகை தீபத்திருநாளன்று 35 லட்சத்திற்கும் குறையாமல் மக்கள் வந்து போகின்றனர். பெரும்பாலோர் வெளிநாட்டினராகும்.

அவர்கள் விரைவாக திருவண்ணாமலைக்கு வருவதற்கு வான்வழிப் பயணத்தையே விரும்புகின்றனர். இன்றைய நிலையில் திருவண்ணாமலைக்கு அவர்கள் வர வேண்டும் என்றால், அங்கிருந்து 200 கி.மீ. தொலைவிலுள்ள சென்னைக்கு வந்து அல்லது பெங்களூருக்கு வந்து அங்கிருந்து சாலை மார்க்கமாகத்தான் வர வேண்டும்.

திருவண்ணாமலையில் விமான நிலையம் இல்லாத காரணத்தால் சுற்றுலாத்தலம் என்ற தகுதியை பெற இயலவில்லை. இங்கு சுற்றுலா பயணிகளால் அரசுக்கு வருவாய் வரவும் வாய்ப்புள்ளது.

எனவே திருவண்ணாமலைக்கு வெகு அருகே உள்ள மேல்செங்கத்தில் போதிய இட வசதி உள்ளதால், அங்கு ‘உதான்’ திட்டத்தின் கீழ் விமான நிலையம் ஏற்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

ஊடகங்களில் வெளியாகும் பொய் – புரளி

போலிச் செய்திகளைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மக்களவையில் – டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 22-

நாட்டில் அச்சு காட்சி மற்றும் இணைய தள ஊடகங்கள் மூலம் வேண்டுமென்றே பொய் புரளி போலிச் செய்திகள் (Fake News) மற்றும் பொருத்தமற்ற செய்திகள் வெளியிடுவதை தடுக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து அவரது கேள்வி வருமாறு:

நாட்டில் அச்சு காட்சி மற்றும் இணைய தள ஊடகங்கள் மூலம் பொய் புரளி போலிச் செய்திகள் (Fake News) மற்றும் பொருத்தமற்ற செய்திகள் பெருகுவதை ஒன்றிய அரசு தீவிரமாகக் கவனித்து வருகிறதா? அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும் இது தொடர்பாக ஒன்றிய அரசு எடுத்த தீர்வு நடவடிக்கை யாது?

நாட்டில் பொய் புரளி போலிச் செய்திகளின் அச்சுறுத்தலைச் சமாளிக்கவும் தடுக்கவும் அரசாங்கம் ஏதேனும் உறுதியான நடவடிக்கைகளை எடுக்கிறதா?

இது தொடர்பாக ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஒன்றிய அரசிடம் ஏதேனும் உத்தேச திட்டம் உள்ளதா அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

அதற்கு ஒன்றிய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான துணை அமைச்சர் டாக்டர் எல். முருகன் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:

சமூகத்தை பெருமளவில் மோசமாக பாதிக்கும் சாத்தியமுள்ள போலி மற்றும் தவறான தகவல்களின் பரவலைக் கட்டுப்படுத்த ஒன்றிய அரசு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கிறது. இது சம்பந்தமாக பல்வேறு ஊடக தளங்களில் போலிச் செய்திகளை நிவர்த்தி செய்ய அரசாங்கத்திடம் பல்வேறு சட்டரீதியான மற்றும் நிறுவன வழிமுறைகள் உள்ளன.

அச்சு ஊடகங்களைப் பொறுத்தவரை, இந்திய பத்திரிகை கவுன்சில் (PCI) வெளியிட்ட “பத்திரிகை நடத்தை விதிமுறைகளை” செய்தித்தாள்கள் கடைப்பிடிக்க வேண்டும் இது மற்றவற்றுடன் போலி / அவதூறான / தவறான செய்திகளை வெளியிடுவதைத் தடுக்கிறது. சட்டத்தின் பிரிவு 14 இன் படி விதிமுறைகளை மீறுவதாகக் கூறப்படுவது குறித்து கவுன்சில் விசாரணை நடத்துகிறது மேலும் செய்தித்தாள் ஆசிரியர்கள் பத்திரிகையாளர்கள் போன்றவர்களை எச்சரிக்கலாம் கண்டிக்கலாம்.

தனியார் செயற்கைக் கோள் தொலைக்காட்சி சேனல்களில் உள்ள உள்ளடக்கம் கேபிள் தொலைக்காட்சி நெட்வொர்க்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் 1995 இன் கீழ் உள்ள நிகழ்ச்சிக் குறியீட்டைப் பின்பற்ற வேண்டும் இது மற்றவற்றுடன் ஆபாசமான அவதூறான வேண்டுமென்றே பொய்யான மற்றும் பரிந்துரைக்கும் மறைமுகமான மற்றும் அரை உண்மைகளைக் கொண்ட எந்த உள்ளடக்கமும் தனியார் செயற்கைக் கோள் தொலைக்காட்சி சேனல்களில் ஒளிபரப்பப்படக்கூடாது என்று கூறுகிறது.

கேபிள் தொலைக்காட்சி நெட்வொர்க் (திருத்தம்) விதிகள் 2021 தொலைக்காட்சி சேனல்களால் விதிமுறைகளை மீறுவது தொடர்பான புகார்களை ஆராய மூன்று அடுக்கு குறை தீர்க்கும் வழிமுறையை வழங்குகிறது.

நிகழ்ச்சிக் குறியீட்டை மீறுவது கண்டறியப்பட்டால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்.

வெளியீட்டாளர்களின் உள்ளடக்கம் மற்றும் டிஜிட்டல் மீடியாவில் செய்திகள் மற்றும் நடப்பு நிகழ்வுகளுக்கு தகவல் தொழில்நுட்பம் (இடைநிலை வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் மீடியா நெறிமுறைகள் குறியீடு) விதிகள் 2021 (IT விதிகள் 2021) அத்தகைய வெளியீட்டாளர்களுக்கான நெறி முறைகளை வழங்குகிறது.

மத்திய அரசு தொடர்பான போலி செய்திகளைச் சரிபார்க்க நவம்பர் 2019 இல் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தின் பத்திரிகை தகவல் பணியகத்தின் கீழ் ஒரு உண்மைச் சரிபார்ப்புப் பிரிவு (FCU) அமைக்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் அமைச்சகங்கள்/துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட ஆதாரங்களில் இருந்து செய்திகளின் நம்பகத்தன்மையைச் சரிபார்த்த பிறகு FCU அதன் சமூக ஊடக தளங்களில் சரியான தகவல்களை வெளியிடுகிறது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் கூறினார்.